

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், காட்டுமன்னார்கோவில், பெருந்தலைவர் எம்.ஆர்.கே கலையரங்கத்தில்,தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையற்கன்னி, விஜயன்ராகவன்,சுவை.சுரேஷ், எம்.எம்.சிவா,அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளரு மான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட,மாநகர ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் , பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி ஓரணியில் தமிழ்நாடு டிஜிட்டல் பாக முகவர்கள் கூட்டம், மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சீ.வி.கணேசன் தலைமையில் நடைபெற்றது. தொகுதி பார்வையாளர் செ. புஷ்பராஜ் முன்னிலை வகித்தார். பண்ருட்டி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட கழக அவைத்தலைவர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆர் .எஸ் .எம் .தணிகை செல்வன், ஆனந்தி சரவணன் ,தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் நாராயணன் செயல்முறை விளக்கம் ஆலோசனைகள் வழங்கினார். மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் ,தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மக்களுக்குப் பாதிப்புவரும் பொழுது

# மக்களைக் காப்பாற்ற மக்கள் பக்கம் தான் நிற்போம்!

## தென்காசியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேட்டி!

தென்காசி.ஜுலை.3

தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் வருவாய் மற்றும்பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.



முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழக மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒரு குடையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார். டெல்லி பாசிச பா.ஜ.க அரசு தமிழ்மொழியை, தமிழ் உணர்வையும்,தமிழர்களின் மானத்தையும் அழிக்க வேண்டும் என்று எண்ணுகிற முயற்சியை தடுத்து நிறுத்த “ஓரணியில் தமிழ்நாடு”என்ற கருத்தை சொல்லி தமிழ் மொழியையும் மானத்தையும் காப்பாற்றவும்,அரசுக்கு தேவையான நிதியை பெறுவதற்காகவும் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை கண்டிப்பதற்காகவும் முன்னெடுப்பு செய்திருக்கிறார்.நாம் அத்தனை பேரும் ஒன்றாக சேர வேண்டும்.

தமிழகத்தில் 68,000 ம் வாக்குச்சாவடிகள் உள்ளது. தென்காசியில் 1,564 வாக்குச்சாவடிகள் உள்ளது.கழக பொறுப்பாளர்கள்,நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) உடன் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து அரசின் திட்டத்தால் பயனடைந்து உள்ளார்களா? வேறு தேவைகள் உள்ளதா என்பது குறித்து எல்லாம் கேட்டு அறிந்து அதனை சரி செய்து கொடுப்பதற்காக இந்த திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் துவங்கியிருக்கிறார். 3 ம் தேதி தொடங்கி 45 நாட்கள் இது நடைபெறுகிறது. கட்சியைப் பார்க்காமல் இந்தப் பணியை செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்தும்,அரசின் சாதனைகளை சொல்லியும்,

மகளிர் உதவித்தொகை முதியோர் உதவித்தொகை கிராமங்களில் உள்ள பிரச்சினைகள் உள்ளிட்டவற்றை தலைமைக் கழகத்திற்கு எடுத்துச் சொல்லி அவற்றிற்கு தேவையான நிவாரணங்களை பெற்றுத் தர இருக்கிறோம்.உறுப்பினர்களை சேர்ப்பதற்காக மட்டுமல்ல, எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள், வாக்களித்தவர்கள்,வாக்களிக்காதவர்களை கூட எங்களை ஆதரிக்கும் வகையில் எங்களது அணுகுமுறை இருக்கும்.ஊர் ஊராக ஒவ்வொரு பூத்துகளுக்கும் செல்ல வேண்டும்.

நான்கு ஆண்டுகள் முதலமைச்சர் அவர்களின் சாதனைகளால் ஆட்சி நடந்து வருகிறது.தென்காசி புதிதாக பிரித்த மாவட்டம். தென்காசி ஆட்சியர் அலுவலகம் சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு விட்டது என்று சொல்லி, நல்ல காரியம் நடக்கும் பொழுது ஒரு சில சக்திகள் தடுப்பதில் குறியாக இருக்கின்றனர். தென்காசி மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வருகையின் போது நல்ல அறிவிப்புகளும், பெரிய திட்டங்களும் வரும். விருதுநகரில் நடைபெற்ற அரசு நிகழ்வில் முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 450 கோடியை ஒதுக்கி உள்ளார்கள்.இரண்டு மூன்று வருடங்களாக அரசிடம் போதிய பணம் இல்லாத காரணத்தால் அரசை நடத்துவதே சிரமமாக இருந்தது.பணம் இல்லை என்பது உலகம் அறிந்த விஷயம். கடந்த அரசு பணமே இல்லாமல் விட்டு சென்று விட்டனர்.

நான்கு வருடங்களாக அரசை நடத்தியதே முதல்வர் அவர்களின் தனிப்பட்ட சாமர்த்தியம் தான். தென்காசி புதிய மாவட்டம்.இனிமேல் தான் வளர்ச்சி பெறும்.இந்த மாவட்டம் முன்னேற வேண்டும்.மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.கனிமவள பிரச்சினையில் அரசு பல விதிமுறைகளை அறிவித்துள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சக்கரங்களுக்கு மேல் உள்ள வண்டிகளை இயக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்துள்ளது. ஆன்லைன் மூலம் பாஸ் வழங்கப்படுகிறது. இவற்றையெல்லாம் மீறி ஒரு சிலர் தவறு செய்கின்றனர்.அவை எல்லாம் சரி செய்யப்படும்.தென்காசி மாவட்டத்தில் பெரிய அளவில் தொழிற்சாலை இல்லை.இந்த மாவட்டம் விவசாயத்தை நம்பியே உள்ளது.அதில் தான் வாழ்வாதாரம் செய்து நடத்தி வருகின்றனர். இதனாலே சாலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிலத்தை கையகப்படுத்தும் போது விவசாய நிலம் என்று எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். தென்காசி மாவட்டத்தின் தேவைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் இடம் கேட்டிருக்கிறோம்.முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.சாரல் திருவிழா நிதி வசூல் குறித்து விபரம் கேட்டு ஆலோசனை வழங்கப்படும். விசாரணை கைதி மரணம் குறித்து போலீசார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.போலீஸுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆறு பேர் தவறு செய்திருந்தால் அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பது இல்லை, மக்களுக்கு பாதிப்பு வரும் பொழுது மக்கள் பக்கம் தான் நிற்போம்.தவறு செய்தவர்களை காப்பாற்றி அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படும் வகையில் செயல்பட மாட்டோம்.அரசுக்கும் முதல்வருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு கிடையாது.தவறு யார் செய்திருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அப்போது தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நகர செயலாளர் சாதிர் ஆகியோர் உடன் இருந்தனர்.

### திருப்புவனம் – மடப்புரம்

# அஜித் குமார் மரணத்தில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை. ஜுலை. 3 .

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா மடப்புரத்தில் மடப்புரம் காளியம்மன் கோவிலின் காவலாளி அஜித் குமார் கடந்த மாதம் 28ஆம் தேதி திருட்டு வழக்கு ஒன்றில் சந்தேகத்தின் பெயரில் போலீசார் விசார ணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார் .அவர் 29ஆம் தேதி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார் . இந்த மரணம் குறித்து திருப்புவனம் போலீசார் 6 பேர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்கள். இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் கட்டாய காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டார். மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந்தரம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இது தொடர்பாக முதலமைச்சர் ஸ்டாலின் உத்திரவின்படி கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் நேற்று காலை மடப்புரத்தில் அஜித் குமாரின் வீட்டில் அவர் தாயார் மாலதி சகோதரர் நவீன் குமார் ஆகியோரிடம் மூன்று சென்ட் வீட்டுமனை பட்டா உத்தரவு, நவீன் குமாருக்கு காரைக்குடி ஆவின் நிறுவனத்தில் பணி உத்தரவு மற்றும் மாவட்ட கழகத்தின் சார்பில் ரூபாய் 5 லட்சம் நிதி உதவி ஆகியவற்றை வழங்கினார்



தொடர்ந்து அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது. இந்த ஒரு துயரமான சம்பவம் இம்மாதம் 28ஆம் தேதி நடைபெற்றது . 29ம் தேதி அவர் மரணமடைந்துள்ளார். இது தொடர்பாக காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்துள்ளார். இது காவல்துறையின் அத்துமீறிய செயல் என்பதையும் அவர் தொலைபேசியில் அஜித் குமார் சகோதரர் நவீன் குமார் தாயார் மாலதி ஆகியோரிடம் கூறியுள்ளார். இந்த அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக உறுதுணையாக நியாயமான முறையில் அவர்களின் பக்கம் நிற்கும் என்றும் முதல்வர் கூறிஉள்ளார்அதன் பேரில் சி.பி.ஐ. விசாரணைக்கு தானாகவே முன் வந்து உத்தரவிட்டுள்ளார் . தொடர்ந்து தமிழக அரசு சி.பி.ஐ. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்று கூறியுள்ளார் . இத்தகைய சம்பவம் துரதிஷ்டவசமானது . இது இனிமேல் நடைபெறக்கூடாது என்று முதல்வர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர்களுக்கு வீடு இல்லை என்று கூறியதும் 10 மணி நேரத்தில் அவர்களுக்கான மூன்று சென்ட் பட்டா உடன் கூடிய ஆணையையும் அவர் சகோதரர் நவீன் குமாருக்கு பணி நியமன உத்தரவுகளையும் முதல்வர்அவர்கள் வழங்க உத்தரவிட்டார்கள் . அதன்படி அவர்களிடம் அதற்கான உத்திரவு கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து அவர்களுக்கு அரசு தரப்பில் அனைத்து உதவிகளும் செய்துதரப்ப்படும். விரைவான விசாரணை நடைபெற்று குற்றவாளிகள் உரிய தண்டனை பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அஜித்குமார் நகையை திருடினார் என்ற குற்றச்சாட்டு கரும் புள்ளி அகற்றிடும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.அந்த கரும் புள்ளி அகற்றப்படும் . அண்ணா பல்கலைக்கழகத்தில் ஞானசேகரன் வழக்கில் குற்றவாளி க்கு உரிய தண்டனை பெற்றுதந்தது போல் இந்த கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கு அரசு முழு ஒத்துழைப்பு நல்கும் என்றும் கூறிஉள்ளார். எதிர்காலத்தில் இது போன்ற இத்தகைய சம்பவங்கள் நடைபெறக் கூடாது என்று நேற்று முன் தினம் தலைமைச் செயலகத்தில் காவல்துறை வருவாய் துறை உயர் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் கடுமையான எச்சரிக்கையும் விடுத்துள்ளார் . எனவே இது ஒரு மிகவும் துயரமான சம்பவம் .இதே போல் சிங்கம்புணரியில் தனியார் பள்ளியில் படித்து வந்த மாணவன் ஒருவன் மரணம் குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. இதுகுறித்து மறியல் செய்தவர்களிடம் நான் நேரில் சென்று பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி அதன் பேரில் அவர்கள் போராட்டத்தை கைவிட்டார்கள். இதுகுறித்து உரிய விசாரணை நடைபெற்று வருகின்றது .பள்ளி நிர்வாகத்தினர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதேபோல் காளையார்கோவில் அருகே தனியார் பள்ளியில் படிக்கும் மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். அது குறித்தும் விசாரணை நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து இத்தகைய துயரசம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு காவல்துறையினரும் முழு ஒத்துழைப்பினை கடமை உணர்வுடன் பணியாற்ற வேண்டும். இத்தகைய துயர சம்பவங்கள் நடைபெற்றவுடன் உடனடியாக முதல்வர்அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் இத்தகைய லாக்கப்மரண சம்பவங்கள் நடத்தபோது தீவிர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் நேரத்தில் இதை அவர்கள் அரசியல் ஆக்க பார்க்கிறார்கள் . இதில் நாங்கள் அரசியல் செய்ய விரும்பவில்லை. அநீதிக்கு எதிராக மனித நேயத்துடன் முதல்வர் அவர்கள் நடந்து கொள்கிறார்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன் கூறினார் .

பேட்டியின் போது திருமதி தமிழரசி ரவிவிக்குமார் எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி திருப்பூவனம் பேருராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் மானாமதுரை நகர் மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி கோட்டாட்சியர் விஜயகுமார், வட்டாட்சியர் விஜயகுமார், அச்சங்குளம் முருகன் ,மடப்புரம் மகேந்திரன், காளீஸ்வரன், ஒன்றிய செயலாளர் கடம்பசாமி , ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துகுமார் மற்றும் அரசு அதிகாரிகள் கட்சி நிர்வாகிகள் இருந்தார்கள்.

### கழக பொறியாளர் அணி சார்பில்

## “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் கழக உறுப்பினர்கள் சேர்க்கைத் திட்டம்!

### மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கழகத் தலைவர் ஆணைக்கு ஏற்ப தமிழ்நாட்டு மக்களை அநீதிகளுக்கு எதிராக ஒன்றிணைத்திட நம் மண் மொழி மானம் காத்திட "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற மாபெரும் கழக உறுப்பினர்கள் சேர்க்கைத்திட்டத்தில் பொறியாளர் அணியின் மாவட்ட / மாநகர / பகுதி / ஒன்றிய / பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கழகத்தின் வழிகாட்டுதலின் படி தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.

நமது அணியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தத்தமது பூத்துகளில் உறுப்பினர் சேர்க்கையின் பொழுது உடனிருந்து தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

BDA எனப்படும் Booth Digital Agent களுக்குத் தேவையான தொழில்நுட்பத் உதவிகளை நமது பொறியாளர் அணியினர் உடனிருந்து செய்துதரவேண்டும்.

மேற்கண்ட செயல்பாடுகளை மாவட்ட அமைப்பாளர்கள் கண்காணித்து தலைமை நிலையத்துக்கு வாராந்திர அறிக்கைகள் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர் –
தி.மு.க. பொறியாளர் அணி



கோலியனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் கோலியனூர் கூட்ரோடு அருகில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா.ராஜசேகர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர் பா.தெய்வசிகாமணி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரை ஆற்ற தலைமைக் கழக பேச்சாளர்கள் வே.விக்ரமன்,அப்துல் வகாப் அதாய் மற்றும் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் துரை. கி.சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், தே.முருகவேல், ஏ.சச்சிதானந்தம் , ஏசி கே பிரேம், பா கலைவாணன், ப.அன்பரசு, உதயகுமார், இரா.கண்ணப்பன் பா.சிவசங்கர், ம.குணசேகர், எம்.ராமச்சந்திரன் , எஸ்.ஸ்ரீதர், ஆர்.ஜெயந்தி கிருபாநிதி, ஆர்.கே.மணிவேல், சிவகாமி ராஜசேகர், சக்கரவர்த்தி, ஜே.முத்துக்குமார், மு.பிரபாகரன், எஸ்.செந்தமிழ்செல்வன், எடிட்ராஜ், நாகவல்லி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இ.மணி நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

### ஜுலை 3 (1998)



**சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்த போது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.**

**மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**